மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் கூறுவது போன்று அவருடைய தொகுதியிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சியிலே அவருடைய பெயர் விடுபட்டிருக்குமானால் அது வருந்தத்தக்கது. அதற்கான காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிந்து அதை நீக்குவதற்கான முயற்சிகளை அந்தந்த துறையினரும் மேற்கொள்வார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொன்ன இந்தப் பதிலே எல்லா துறையினர்களுக்கும் எடுத்துக் காட்டாக அமைந்து எதிர்காலத்திலே நடந்து கொள்வதற்கு வழி முறையாக அமையும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுமானால் வராமல் இருக்கலாம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதிக்குப் போவதைத் தவிர வேறு வேலை கிடையாது. அதனாலே சட்டமன்ற உறுப்பினர்கள் விட்டுப்போகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

(ஈ) உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் தட்டுப்பாடு.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற சிரமத்தைத் தவிர்ப்பது பேரவை தலைவரான உங்களுடைய பொறுப்பாகும். நேற்றைய தினம் இரவிலே சட்டமன்ற விடுதியில் சிறிதளவு கூட தண்ணீர் இல்லை. குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஏற்கனவே அங்கே 'வாட்டர் கூலர்' இருந்தது. இப்போது அதனுடைய ஸ்டாண்டு மட்டும்தான் அங்கே இருக்கின்றது. எனவே உறுப்பினர்களுக்கு ஏற்பாடு குறைந்தபட்ச குறைபாடுகளை தீர்ப்பதற்கு முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்லபடியாக தீர்த்து வைக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

(முற்பகல் 10-20)

4. கவன ஈர்ப்பு

கஸ்தூரிபாய்காந்தி மருத்துவமனையில் அரசு மருத்துவர் இறப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ப. வெங்கடசுப்பிரமணியம் டாக்டர் கே. சௌரிராஜன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.